**இலங்கை கைப்பணிகள் சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை கைப்பணிகள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளினதும் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது மன்றத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக சபையின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக சபையின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற

தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் சபையின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | உரிய நியமங்களின் தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | --------------------------------- | --------------------------------- | -------------------------- |
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 1 இன் 69 ஆம் பிரிவின் பிரகாரம் பொறுப்புக்கள் அறிக்கையிடப்பட்ட காலப்பகுதியின் பின்னர் 12 மாதங்களுக்குள் தீர்த்து வைப்பதற்கு நிர்ணயித்த பொதுவான செயல் நடவடிக்கையின் போது தீர்த்து வைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற பொறுப்புக்கள் மாத்திரமே நடைமுறைப் பொறுப்பாக இனங்காணப்படுகின்றது. எனினும் நடைமுறைப் பொறுப்பாக காண்பிக்கப்பட்ட ரூபா 290,919,988 ஆன வியாபார கடன்கொடுத்தோர் மற்றும் ரூபா 119,436,360 ஆன ஏனைய கடன்கொடுத்தோர் மீதியில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்கள் வரையான காலப் பகுதியில் அறவிட வேண்டிய ரூபா 135,406,440 மீதியும், மற்றும் 05 வருடங்களை விஞ்சிய ரூபா 168,912,845 மீதியும் காணப்பட்டது. | பழைய மீதி கொடுப்பனவுகளுடன் இணக்கம் செய்யப்படாமல் முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன், இந்த நிலைமை தற்போது மாற்றமடைந்துள்ளமையால் பழைய கொடுப்பனவுகள் மற்றும் ஆரம்ப மீதிகளை இணக்கம் செய்து அகற்றுவதற்கு அநேக காலம் எடுக்கின்றமையினால் மீதிகள் அவ்வாறே முன்கொண்டுவரப்பட்டிருந்தது. | பழைய மீதிகளை தீர்த்து வைத்து நியமத்தின் பிரகாரம் கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மொத்த சொத்துக்களில் 9.8 சதவீதம் ஆன இரண்டாவது தரத்தில் உள்ள இருப்பாக பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடற்ற இருப்பாக ரூபா 150,731,992 ஆக இருந்ததுடன், அதன் | பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைத்த உடன் இந்த தேறிய தேறக்கூடிய பெறுமதியாக கணக்குகளில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், தற்போது குழுவினால் இந்த பொருட்கள் பகுப்பாய்வு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | இருப்புக்களின் தேறிய தேறக்கூடிய பெறுமதி கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக இருப்புக்களின் உள்ளபடியான பெறுமதியை வெளிப்படுத்தாமையினால் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 28 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பு மீள்கணிப்பீடு தேறிய தேறக்கூடிய பெறுமதியை காண்பிக்காமையின் காரணமாக இறுதி இருப்பு மிகை மதிப்பீட்டிற்கு உட்பட்டிருந்தது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 34 ஆம் பிரிவின் பிரகாரம் இருப்பு தொடர்பாக சகல நட்டங்களையும் பதிவழிப்பதற்கோ அல்லது நட்டம் ஏற்பட்ட காலப்பகுதியில் செலவினமாக இனங்கண்டு கணக்கீடு செய்யவோ வேண்டியிருந்த போதிலும், சபையின் இழக்கப்பட்ட இழப்பு இருப்பு கணக்கில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,486,004 திரண்ட நட்டம் இருப்பு புத்தகங்களில் இருந்து அகற்றுவதற்கு பதிலாக இழக்கப்பட்ட இருப்பு சொத்தாக புத்தகங்களில் முன்கொண்டுவரப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டிற்குரிய இருப்பு பெறுமதி அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2019 ஆம் ஆண்டு முதல் இருப்பு பற்றாக்குறையை உரிய தரப்பினரிடம் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையால் இதனை பற்றாக்குறை செலவினமாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இருப்பு தொடர்பாக சகல நட்டங்களையும் பதிவழித்தல் நட்டம் ஏற்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கோட்டை லக்சல கட்டிடத்தின் பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் உரிய பிரகாரம் மேற்கொள்ளாமை மற்றும் வழக்கு நடவடிக்கைகளின் காரணமாக 2014 ஆம் ஆண்டின் போது அதற்காக செலவிடப்பட்ட ரூபா 45,451,390 தொகை 2021 ஆம் ஆண்டு வரையும் நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. இப்பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட செலவினம் மற்றும் சொத்துக்களின் ஒரு பகுதி தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த நிர்மாணங்கள் முழுமையாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், ஒப்பந்தகார நிறுவனத்தில் இருந்து இந்த பெறுமதியை உறுதிப்படுத்தி கணக்கீடு செய்வதற்கு செலுத்தப்பட்ட செலவினங்களை வேறுபடுத்திக் கொள்வதற்கு முடியாதிருந்தது. | செலவினம் மற்றும் சொத்து பகுதிகளை தனித்தனியாக இனங்கண்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) மீளாய்வாண்டில் சபையின் வியாபாரம் மற்றும் ஏனைய கடன்கொடுத்தோர் மீதியில் ரூபா 74,917,550 வரவு மீதி உள்ளடக்கப்பட்டமையால் அப்பெறுமதியால் கடன்கொடுத்தோர் மீதி குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இந்த மீதி சில காலமாக கொண்டுவரப்படுகின்றமையினால் தற்போது வழுக்களுடன் கணக்கீடு செய்யப்பட்டுள்ள மீதியை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மீதிகளை சரியாக கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (இ) கணனி துணைப்பாகங்களின் மீதியில் உள்ளடக்கப்பட்ட ரூபா 19,279,453 ஆன கணனி துணைப்பாகங்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன், | தற்போது பயன்பாட்டில் காணப்படுகின்ற கணனி துணைப்பாகங்களை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்குகளுக்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், ஏனைய கணனி | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்பாட்டில் காணப்படுகின்ற கணனி துணைப்பாகங்களை மீண்டும் மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும், பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகின்ற கணனி துணைப்பாகங்களை பௌதீக ரீதியில் இனங்கண்டு விற்றுத் தீர்த்து புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | துணைப்பாகங்களை பயன்பாட்டில் இருந்து அகற்றி யாவற்றையும் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2014 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற செயற்பாட்டு இருப்பு பெறுமதியில் உள்ளடக்கப்பட்ட வழியில் நின்ற இருப்பு கணக்கின் பெறுமதி ரூபா 6,291,571 ஆக இருந்ததுடன், அதில் காணப்பட்ட மீதி கால ரீதியில் இணக்கம் செய்து சரியான இருப்பு பெறுமதியை தீர்த்து வைக்காமையின் காரணமாக உள்ளபடியாக காணப்படாத இருப்பு பெறுமதியொன்று கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டின் போது இந்த முரண்களை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இருப்பு மீதிகளை கால ரீதியில் இணக்கம் செய்து தீர்த்து வைத்தல் வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | விடயம் | நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் பெறுமதி | நேரொத்த அறிக்கையின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | -------------- | ------------ | ------------ | ------------ | ------------ | ------------ |
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 227,931,158 | 95,541,889 | 132,389,269 | இந்த மீதி பழைய முன்கொண்டுவரப்படுகின்ற மீதியாக இருந்தமையால் | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | செயற்பாட்டு இருப்பு | 390,694,027 | 389,284,437 | 1,409,590 | 2022 ஆம் ஆண்டின் போது இந்த முரண்களை கண்டறிந்து மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாட்டிற்கான காரணங்களை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | வழங்கப்படாத கணக்காய்வு சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ------------------- | ------------------- <br> ரூபா | ------------------------- | --------------------------- | ----------------------- |
| (அ) | மூலதன மானியம் | 107,951,172 | மீதி உறுதிப்படுத்தல் | பல வருட காலம் முதல் முன்கொண்டுவரப்படுகின்ற மீதியை தீர்த்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடன்பட்டோர் | 19,429,671 | மீதி உறுதிப்படுத்தல் | இது மிகவும் பழைய மீதியாக இருந்தமையினால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | நிறுத்தி வைத்தல் பணம் | 12,002,564 | மீதி உறுதிப்படுத்தல். | இது மிகவும் பழைய மீதியாக இருந்தமையினால் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்காக சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | அட்டுறு செலவினம் | 6,546,541 | மீதி உறுதிப்படுத்தல். | இது மிகவும் பழைய மீதியாக இருந்தமையினால் பணிப்பாளர் சபைக்கு | -மேற்படி- |

சமர்ப்பித்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விற்பனைகளை மேம்படுத்தும் எதிர்பார்ப்பில் சபைக்குச் சொந்தமான கட்டிடங்களில் வியாபார நடவடிக்கைகளைச் செய்வதற்காக 07 வெளி நிறுவனங்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்ததுடன், 02 நிறுவனங்கள் மாத்திரம் வியாபார நடவடிக்கைகளை அமுல்படுத்தியதன் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் கிடைக்க வேண்டிய வாடகை மற்றும் இலாப வீதம் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 08 வியாபார நிலையங்களுக்காக தும்முல்ல லக்சல கட்டிடத்தில் முதலாவது மாடியின் இட வசதிகளை வாடகைக்கு வழங்கியதற்காக 2018, 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளுக்குரியதாக அறவிட வேண்டிய ரூபா 4,869,200 வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br>தும்முல்ல காட்சி கூடத்திற்கு அடுத்தால் அமைந்துள்ள கட்டிடம் தனியார் நிறுவனத்திற்கு வியாபார நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய ரூபா 7,643,754 வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் ஏனைய நிறுவனம் தற்போது வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்காதிருந்தமையினால் 2022 நவம்பர் 30 இற்கு முன்னர் அந்த வியாபார நடவடிக்கைகளை ஆரம்பிக்குமாறு இறுதி அறிவித்தல் அந்த நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், 2022 திசெம்பர் 15 ஆம் திகதிக்கு முன்னர் அந்த நிலுவை பணத்தை செலுத்துவதற்கு தும்முல்ல காட்சி கூடத்திற்கு அடுத்தாலுள்ள நிறுவனம் தவறுமாயின் நிறுவனத்தில் இருந்து அகற்றுவதற்கு ஏற்படும் என எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | பெறவேண்டிய வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய பணம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கைப்பணிகள் சபையினால் தொழிற்படு மூலதன தேவைக்காக கோட்டை லக்சல கட்டிடத்தை அடகு வைத்து 2012-2018 காலப்பகுதியில் இலங்கை வங்கியில் இருந்து பெற்ற ரூபா 950 மில்லியன் கடன் தொகையில் 2019 ஆம் ஆண்டின் இறுதி வரையில் மீதியாக காணப்பட்ட தொகை ரூபா 273 மில்லியன் ஆகும். 2020 ஆம் ஆண்டில் புதிய 03 கடன் பணமாக மீள்ஆவணப்பபடுத்தப் பட்டிருந்ததுடன், அதற்கு செலுத்த வேண்டிய கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தாமையின் காரணமாக கடன் தொகை மற்றும் வட்டியுடன் 2021 ஆம் ஆண்டு முதல் புதிய 9 கடன் தொகைகளாக வெளியிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 ஆம் ஆண்டின் இறுதி வரையில் அந்த கடன் அளவு ரூபா 306,276,632 வரை 12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இந்த கடன் பணத்திற்காக 2021 ஆம் ஆண்டிற்காக செலுத்த வேண்டிய ரூபா 9,875,272 ஆன கடன் வட்டிப் பணம் இது வரை செலுத்தப்பட்டிருக்க வில்லை. | 2020/21 ஆம் ஆண்டுகளின் போது கொவிட் தொற்று நோயின் இடையே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததன் விளைவாக நிறுவனத்தின் விற்பனை வருமானம் முழுமையாக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வங்கி கடன் செலுத்துவதற்கு முடியாதிருந்ததுடன், 2022 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை கடன் சலுகை நிறுவனத்திற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | குறித்துரைத்த காலப்பகுதியில் உரிய வட்டி மற்றும் தவணைப் பணம் செலுத்துதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை மத்திய வங்கியின் சௌபாக்கிய கடன் முன்மொழிவுத்திட்டத்தின் கீழ் பிரதேச அபிவிருத்தி வங்கிக்கு வழங்கப்பட்ட மீள்நிதியீட்டல் வசதியூடாக | 2020/21 ஆம் ஆண்டுகளின் போது கொவிட் தொற்று நோய் நிலைமையின் இடையே நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்ததன் விளைவாக நிறுவனத்தின் | குறித்துரைத்த காலப்பகுதியில் வட்டி மற்றும் தவணைப் பணத்தை செலுத்துவதன் மூலம் பாதகமான |

| | | |
|---|---|---|
| இலங்கை கைப்பணிகள் சபைக்கு 2013 ஆம் ஆண்டின் போது ரூபா 200 மில்லியன் கடன் தொகை 02 தவணைகளின் கீழ் கையளிக்கப்பட்டிருந்தது. இந்த கடன் தொகை 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அது ரூபா 158,399,824 வரை குறைவடைந்திருந்தது. எனினும், 2020 ஆம் ஆண்டில் வட்டி செலுத்தாமையின் அடிப்படையில் வட்டித் தொகை ரூபா 8,323,585 மற்றும் 2021 மார்ச் மாதம் வரை வட்டித் தொகை ரூபா 4,586,188 ஆக ரூபா 12,909,773 தொகை மூலதனமாக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் மொத்த கடன் தொகை ரூபா 171,309,597 வரை அதிகரித்திருந்தது. அவ்வாறே 2021 ஆம் ஆண்டிற்காக கடன் தவணை மற்றும் வட்டிப் பணமாக ரூபா 21,796,529 இனை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விற்பனை வருமானம் முழுமையாக வீழ்ச்சியடைந்ததன் காரணமாக வங்கிக் கடன் செலுத்துவதற்கு முடியாதிருந்தது. | நிலைமையினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9.1 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| I. | நிதிப் பிரமாணம் 371(5) | பணிகள் பூத்திசெய்யப்பட்டு 10 நாட்களுக்குள் உபகட்டுநிதி தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையின் ஊழியர்களால் பெறப்பட்டு 02 வருடங்களுக்கு குறைந்த ரூபா 708,818 ஆன நானாவித முற்பண தொகை இந்த அறிக்கை திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 2011 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய சபையின் பல்வேறு பிரிவுகள் மற்றும் உத்தியோகத்தர்கள்/ ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 17,589,311 தொகையான வியாபார/ வியாபாரமற்ற கொள்வனவு முற்பண மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2011 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்குரிய முற்பண மீதிகளை தொடர்ந்தும் பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு எதிர்வரும் 2022 ஆம் ஆண்டில் உச்ச அளவில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் முற்பணத்தை தீர்த்து வைத்தல் வேண்டும். |
| II. | நிதிப் பிரமாணம் 371(2)(அ) | நாளாந்தம் சில்லறை செலவினங்களைச் செய்வதற்காக பதவி நிலை உத்தியோகத்தரின் நேரடி மேற்பார்வையின் கீழ் சில்லறைச் செலவினங்களுக்காக ரூபா 25,000 ஆகக் | சகல சில்லறைச் செலவினங்களும் ரூபா 25,000 எல்லையில் பேணிச் செல்வதற்கு 2023 சனவரி மாதம் முதல் நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், சகல பிரிவு தலைவர்களுக்கும் இது தொடர்பாக | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கூடிய அளவு வரை சில்லறைக் காசு உபகட்டு நிதியாக விநியோகிக்க முடியுமாக இருந்த போதிலும், 09 காட்சி கூடங்கள் மற்றும் பிரதான அலுவலகத்தில் 02 பிரிவுகளுக்கு அந்த எல்லையினை விஞ்சி சில்லறைக் காசு கட்டுநிதி விநியோகிக்கப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | தாபன விதிக் கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 23 ஆம் பந்தி | சபைக்கு ஏற்பட்டிருந்த ஊழல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணையின் போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களின் பிரகாரம் இரண்டு உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்பட்ட மோசடிகளின் காரணமாக 2015 நவம்பர் 24 ஆம் திகத முதல் வேலை தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தது. 2015 திசெம்பர் 23 ஆம் திகதி இந்த உத்தியோகத்தர்களுக்கு குற்றப்பத்திரிகை சமர்ப்பித்து மீண்டும் 2016 சனவரி 11, 2016 யூன் 21 மற்றும் 2016 யூன் 06 திருத்தப்பட்ட குற்றப்பத்திரிகை விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முறையான ஒழுக்காற்று விசாரணை 2020 | அடுத்து வரும் பணிப்பாளர் சபைக்கூட்டத்தின் போது இது தொடர்பாக கவனத்தில் கொண்டு ஒழுக்காற்று கட்டளை தொடர்பாக இறுதி தீர்மானம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | தாமதமின்றி ஒழுக்காற்று கட்டளையை அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெப்ரவரி மற்றும் 2019 திசெம்பர் மாதங்களில் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதும் ஒழுக்காற்று கட்டளை 2022 ஒக்டோபர் வரை விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2003 ஒக்டோபர் 28 ஆம் திகதிய PED 17 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2021 ஒக்டோபர் மாதம் முதல் 2022 மார்ச் 31 வரை பேணிச் செல்லப்பட்ட டுபாய் எக்ஸ்போ 2021/2022 சர்வதேச விற்பனை காட்சிக்காக லக்சலயை பிரதிநிதித்துவப்படுத்தி பங்கு பற்றிய உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு சுற்றுலாவிற்காக பொது முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் முன் அங்கீகாரம் பெறப்படாதிருந்ததுடன், உத்தியோகத்தர்களால் ரூபா 1,219,480 வெளிநாட்டு பிரயாணப் படி மற்றும் அது சார்ந்த செலவினங்கள் பெறப்பட்டிருந்தது. | கடமை விடுமுறை விண்ணப்பம் 2021 செப்டம்பர் 21 ஆம் திகதிய கடிதம் மூலம் அமைச்சுக்கு விடுமுறை அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக அமைச்சுக்கு மீள்நினைவூட்டலும் மேற்கொள்ளப்பட்ட போதும், அங்கீகாரம் சபைக்கு இது வரை கிடைத்திருக்கவில்லை. | வெளிநாட்டு சுற்றுலாவிற்கு முன்னர் விடுமுறை அங்கீகரித்துக் கொள்ளல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 11 ஆம் பகுதியின் 09 ஆம் பிரிவின் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 880 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய சகல அரசாங்க உத்தியோகத்தரிடம் | பிணை வைப்பதற்காக மீண்டும் நிறுவனத்தின் ஊழியர்களிடம் இருந்து உரிய பணிகளை பகுப்பாய்வு செய்து ஊழியர்களில் பிணை வைக்க வேண்டிய ஊழியர்களுக்கு | நிறுவனத்திற்கு மேலதிக கிரயமொன்றை செய்வதற்கு ஏற்படாத வகையில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை |

| | | |
|---|---|---|
| அந்த நிதிப் பிரமாணத்தை பின்பற்றி பிணை வைக்கும் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும், அதற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. பிணை வைத்த உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட்ட ஊழியர் பிணைப் பணம் உரிய உத்தியோகத்தர் பெயரில் சேமிப்பு கணக்கில் வைப்புச் செய்யப்படாமல் ரூபா 2,410,000 தொகையொன்று சபையின் நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. அந்த தொகைக்கு வட்டி பணம் சபைக்கு கிடைக்காதிருந்த போதும், உரிய உத்தியோகத்தர்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி பணம் சபையினால் மதிப்பிடப்பட்டு செலுத்தப்பட்டதன் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,289,567 மேலதிக கிரயமொன்றை செய்ய வேண்டியிருந்தது. | பிணைப் பணம் வைப்பதற்கு முகாமைத்துவத்திற்கு பரிந்துரை சமர்ப்பித்திருந்ததுடன், தற்போது வரையில் பிணை வைக்கப்பட்டுள்ள பணத்தை தனியான சேமிப்பு கணக்கில் மாற்றி வட்டியை பெற்றுக் கொள்வதற்குமான நடவடிக்கைகள் 2022 ஆம் ஆண்டில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 58,546,847 பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 105,744,071 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 47,197,224 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு அரசாங்கத்தின் மானியம் ரூபா 61,438,748 தொகை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 22,573,938 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) சபையினால் 2021 முதல் 2023 காலப்பகுதிக்கு உரியதாக தயாரிக்கப்பட்ட வியாபார திட்டத்தின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 435 மில்லியனை இலக்காகக் கொண்ட விற்பனை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் சபையின் மூலம் உழைக்கப்பட்ட உள்ளபடியான வருமானம் | இந்த நிலைமையில் நாட்டில் காணப்பட்ட சிக்கலான நிலைமையின் அடிப்படையில் வெளிநாட்டு சுற்றுலா பயனிகள் வருகை தராமையினால், நிறுவனத்தின் வருமானத்தை அதிகரிக்கும் நோக்கில் வெளிநாட்டு பட்டைய விற்பனை முகவர் மூலம் விற்பனை கடைகளை திறப்பதற்கு பணிப்பாளர் சபை மற்றும் உயர் | புதிய விலை உபாய திட்டங்களை பின்பற்றி வெளிநாட்டினை போன்று உள்நாட்டிலும் விற்பனைகளை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ரூபா 137 மில்லியன் ஆனமையால், இலக்கிடப்பட்ட அளவில் 31 சதவீத வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. விற்பனை வருமானத்தை உயர்த்தும் நோக்கில் 2021 ஆம் ஆண்டில் சபையினால் பட்டயம் பெற்ற வெளிநாட்டு விற்பனை முகவர்களுடன் ஏழு உடன்படிக்கைகளில் கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், அந்த உடன்படிக்கையின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்க குடியரசில் மாத்திரம் விற்பனை சாலையொன்று திறக்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதி பட்டய விற்பனை முகவருக்கு கிரயம் ரூபா 15,483,376 ஆன பொருட்கள் அனுப்பப்பட்டிருந்தது. விற்பனை முகவருடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் 05.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் வருமானத்தில் ஒரு பகுதியை பகிர்ந்தளித்தல், முதலாவது வருடம் 3 மாத காலத்தில் உழைக்கின்ற விற்பனை வருமானம் ஐக்கிய அமெரிக்க டொலர் 50,000 அல்லது அதற்கு மேற்படுமாயின் மாதத்திற்கு மூன்று சதவீத வருமான சதவீதம் சபைக்கு வழங்கவேண்டியமை இணங்கப்பட்ட போதிலும், இந்த அறிக்கை திகதி வரையிலும் இந்த தொகை பெறப்படாதிருந்ததுடன், கிடைத்த பொருட்களின் விற்பனை விலையான ரூபா 19,889,698 தொகையை வழங்கியிருந்த வங்கி காப்புறுதியும் பணமாக்கப்பட்டு விற்பனை விலை மாத்திரம் தீர்க்கப்பட்டிருந்தது. சபையின் உள்நாட்டு விற்பனைகளுக்கு உரியதாக உழைக்கப்பட்ட இலாப எல்லை 50 சதவீதம் முகாமைத்துவம் தீர்மானம் எடுத்திருந்துடன், இந்த தீர்மானத்தின் பிரகாரம் ஐக்கிய அமெரிக்கவில் விற்பனை வருமானம் ரூபா 15 மில்லியனாக, இது முதலாவது வெளிநாட்டு விற்பனை முகவர் உடன்படிக்கையில் இலாப எல்லை மிகவும் கீழ் மட்டத்தில் அதாவது 22 சதவீதமாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் எதிர்காலத்தில் அனுப்பப்படுகின்ற சகல விற்பனை முகவர் கட்டளைகளுக்ககாவும் இலாப எல்லை 40 சதவீதம் அளவில் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | முதல் 73 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்ட போதிலும், வெளிநாட்டு பட்டய விற்பசைன்சாலை (பென்சைஸ்) விற்பனை மூலம் உழைக்கப்பட்டுள்ள இலாப எல்லை 22 சதவீதம் ஆன குறைந்த பெறுமதியை கொண்டிருந்தது. | | |
| (ஆ) | 2020 இன் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் காலாவதியாவதற்கு அண்மித்த மற்றும் மெதுவாக அசைகின்ற இருப்புக்களை இனங்கண்டு விஷேட கழிவுகளை வழங்கி அவற்றை பணமாக்குவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் ரூபா 9,455,546 பெறுமதியான இரத்தினக் கல் மற்றும் ஆபரண இருப்புக்கள் 2011 ஆம் ஆண்டு முதல் விற்பனை செய்யப்படாமல் பழைமையடைந்து காணப்பட்டதுடன், இந்த இருப்புக்களுக்காக ரூபா 8,102,312 தொகை அந்த காலப்பகுதியின் போது வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | வழங்குனர்களுக்கு செலுத்தி இந்த இருப்பை நிறுவனத்திற்கு சொந்தமாக்கிக் கொண்டிருந்ததுடன், இந்த இருப்பை மீண்டும் பழுதுபார்த்து விஷேட கழிவை வழங்கி பணமாக்குவதற்கு முடியுமாக இருந்ததுடன், ஏனைய விடயங்களை காட்சி கூடங்களில் வைப்பதற்கும் விற்பனை வருமானத்தை பெற்றுக் கொள்வதற்கும் முடியுமாக இருந்தமையால் இந்த இருப்பு தொடர்பாக உடனடியாக மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பழுதுபார்த்து விஷேட கழிவினை வழங்கி விற்பனை செய்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சபையின் வருமானத்தை உயர்த்தும் நோக்கில் 2021 ஆம் ஆண்டு முதல் இணைய வழி ஊடாக விற்பனை திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் அதன் மூலம் ரூபா 769,513 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அந்த முறைமை செயலிழந்து காணப்பட்டது. தற்போது வரையில் இணைய வழி ஊடாக கொள்வனவு செய்வதற்காக மக்களில் அதிகமானவர்கள் முயற்சி எடுக்கும் வகையில் சபையினால் விரிவான | 2021 ஆம் ஆண்டின் போது இணைய வழி ஊடாக விற்பனை திட்டம் தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருந்த போதிலும், இணைய தளத்தை பேணிச் செல்வதற்கான தகவல் தொழில்நுட்ப பிரிவில் உத்தியோகத்தர்கள் காணப்படாத நிலைமையின் இடையே இந்த செயற்பாடுகளை தற்காலிகமாக கைவிட வேண்டியிருந்தமை மற்றும் எவ்வாறாயினும், Web platform அலகு ஊடாக விற்பனை வருமானத்தை | பதிலின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| விளம்பரங்களின் மூலம் விற்பனை சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தமையின் காரணமாக 2022 ஆம் ஆண்டின் செப்டம்பர் வரை ரூபா 37,856 வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சரவை தீர்மான இலக்கம் 12/1523/553/020 ஆம் இலக்க 2012 ஒக்டோபர் 11 ஆம் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் காலி உனவட்டுன வரையறுக்கப்பட்ட இலங்கை சலுசல கிளையில் உள்ள ஆதனங்கள் இலங்கை கைப்பனிகள் சபைக்கு சட்டரீதியான உரித்தை கையளிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், அதன் பிரகாரம் 2012 திசெம்பர் 12 ஆம் திகதி ஆதனங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 15,248,576 தொகை சலுசல நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. இந்த ஆதனங்கள் தொடர்பாக சலுசல நிறுவனத்திற்கு எதிராக ஏனைய தரப்பினர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் DMR 4421/10 இன் கீழ் வழக்கொன்று தொடரப்பட்டிருந்ததுடன், மேலும் சட்ட ரீதியான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்தமையால் அதனை கொள்வனவு செய்தவற்காக பணம் செலுத்தி 10 வருடங்கள் கழிந்திருந்த போதும் அந்த ஆதனங்களின் சட்ட ரீதியான உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணம் செலுத்தியிருக்கும் போது இந்த ஆதனங்களை கையேற்பதற்கு தாமதம் ஏற்பட்டதன் காரணமாக இது தொடர்பாக விரைவாக கவனம் செலுத்தி மேற்கூறப்பட்ட ஆதனங்களை சட்ட ரீதியாக இலங்கை கைப்பணிகள் சபைக்கு தாமதமின்றி கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அமைச்சின் செயலாளருக்கு அறிவிககப்பட்டுள்ளது. | தாமதம் இன்றி சட்ட ரீதியான உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1990 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட கைப்பணியாளர்களின் நலன்புரி நிதியத்தின் உறுப்புரை பிரமாணங்களின் பிரகாரம் கைப்பணியாளர் நலன்புரிக்காக Benevolent Fund என்ற பெயரில் பேணிச் செல்லப்பட்ட நிதியம் 2021 திசெம்பர் 31 வரை ரூபா 5,023,891 தொகை சேர்க்கப்பட்டு நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. இந்த நிதியத்தை கைப்பணியாளர் சபைக்கு கையளிப்பதற்கு 2007 ஆம் ஆண்டில் அமைச்சரவை தீர்மானம் எடுக்கப்பட்ட போதிலும், இது வரை அது கையளிக்கப்படாமல் அரச வங்கியொன்றில் நடைமுறைக் கணக்கில் விளைவற்று காணப்பட்டது. | 2022 ஆம் ஆண்டின் போது நிலையான வைப்பொன்றை ஆரம்பித்து கைப்பணியாளர் நலன்புரி செயற்பாடுகளை மீண்டும் செயற்படு நிலைக்கு கொண்டுவருவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | இந்த நிதியத்தை கைப்பணியாளர் சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மக்கள் வங்கியில் நுவரெலியா கிளையில் பேணிச் செல்லப்பட்டிருந்த நடைமுறைக் கணக்கில் 2013 சனவரி 01 ஆம் திகதி ஆரம்ப மீதி ரூபா 85,587 ஆக இருந்ததுடன், 2021 திசெம்பர் 31 இல் உளள்வாறு மீதி ரூபா 4,785,163 ஆகும். அவ்வாறே நடைமுறைக் கணக்கில் பணம் வைப்புச் செய்தல் பொருளாதார நலனொன்று கிடைக்காதிருந்ததுடன், மோசமான நிதி நெருக்கடிக்கு உட்பட்டிருந்த சபை இந்த நிதியினை ஆக்கபூர்வமான முதலீடு ஒன்றிக்காக அல்லது நாளாந்த நிதித் தேவைக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நுவரெலியா நடைமுறைக் கணக்கில் இது வரையில் உள்ள பணம் ஆக்கபூர்வமானதாக நிறுவனத்தின் நிதித் தேவைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நாளாந்த நிதி தேவைக்காக ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | கைப்பணிகள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற வெளி | அவரச தேவைக்காக பயன்படுத்துவதற்காக | நாளாந்த நிதித் தேவைக்காக |

| | | |
|---|---|---|
| ஒப்பந்த வேலைகளுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய பிணை வைப்பிற்காக மக்கள் வங்கியில் சேமிப்பு கணக்கொன்று 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பேணிச் செல்லப்பட்டிருந்ததுடன், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 2,249,872 ஆகும். அந்த கணக்கிற்காக 3 சதவீதம் ஆன சிறிய வட்டி சதவீதம் கிடைத்திருந்ததுடன், 2021 ஆம் ஆண்டில் வட்டிப் பணமாக ரூபா 66,412 வங்கியானால் சேமிப்பு மீதியில் சேர்க்கப்பட்டிருந்தது. சபையினால் வெளி வேலைகள் அல்லது ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பத்தின் போது தேவையான பிணைப் பணம் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு ஏற்ப வைப்புச் செய்யப்படாமல் கணிசமான தொகையொன்று சேமிப்பு கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டதன் மூலம் கணிசமான வட்டி வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | கணக்கின் மீதியை மீளப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படவில்லை. | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 விளைவற்ற அல்லது குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வியாபாரரீதியாக கேந்திர இடத்தில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட உயர் வணிக பெறுமதியுடைய 44,000 சதுர அடி அளவான கொழும்பு கோட்டை லக்சல நான்கு மாடி கட்டிடம் 2013 ஆம் ஆண்டின் போது நவீனமயப்படுத்தும் நடவடிக்கைகளுக்காக பெறுகை நடைமுறைகளுக்கு புறம்பாக ICTAD நிறுவனத்தில் பதிவு இன்றிய ஒப்பந்தகாரருக்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டின் போது நவீன மயப்படுத்தல் நடவடிக்கைகள் | லக்சல கட்டிடத்தை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் 2014 ஆம் ஆண்டின் போது இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. அதற்குரியதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அந்த விசாரணை நடவடிக்கைகள் முடிவடையாதிருந்ததுடன், இதன் காரணமாக ஒப்பந்தகாரரின் கையிலுள்ள | சபைக்குச் சொந்தமான சொத்துக்களில் இருந்து உச்ச பயன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தது. ICTAD நிறுவனத்தின் அறிக்கையின் பிரகாரம் ஒப்பந்தகாரருக்கு செலுத்தப்பட்டுள்ள தொகையில் இருந்து மேற்கொள்ளப்பட்ட மேலதிக பௌதீக பெறுமதி குறைக்கப்பட்டதன் பின்னர் ஒப்பந்தகாரர் ஒருவரின் பொறுப்பில் காணப்படுகின்ற கைப்பணிகள் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 30 மில்லியன் தொகையினை அறவிடுவதற்கு உள்ள சட்டரீதியான நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதில் 1200 சதுரஅடி நில அளவு மாத்திரம் கோட்டை லக்சல காட்சிக்கூடம் நடாத்திச் செல்லப்படுவதுடன், பல வருடங்கள் முதல் இந்த கட்டிடத்தை பயன்படுத்துவதற்கு முடியாமல் விளைவற்று காணப்பட்டது. சபைக்கு சொந்தமான 60 பேர்ச் அளவான இந்த கொழும்பு கோட்டை காணி மற்றும் 22 பேர்ச் அளவான காலியில் காணப்படுகின்ற காணி என்பவற்றின் பொருளாதார பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ரூபா 30 மில்லியன் பணத்தை சபைக்கு அறவிடுவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் மூலம் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்காக செலவாகியது என எதிர்பார்த்து ரூபா 200 மில்லியன் தொகை இந்த சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு வசதியீனமாக இருந்தமையால் பொருத்தமான வியாபார முன்மொழிவுகளை (EOI's) கோரி கட்டிடத்தை நவீன மயப்படுத்துவதற்கும், முதலீடு ஒன்றை செய்யக் கூடிய முதலீட்டாளரை தெரிவு செய்வதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் 28 மற்றும் 2018 செப்டம்பர் 27 ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நயாகத்தின் DMS 1702 மற்றும் DMS 1702/V01 - III இலக்க கடிதத்தின் மூலம் சபையின் பதவியணியினருக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க பதவியணியினர் உள்ளீர்க்கும் | நிறுவனத்தின் நிதி நிலைமையை நல்ல நிலைக்கு கொண்டு வரும் வரை அமுல்படுத்தாமல் இருப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தது. எனினும் நீண்ட கால ரீதியில் பதவி உயர்வுகள் வழங்கப்படாத எதிர்பார்க்கப்பட்ட நிரந்தர பதவியணியினர் மற்றும் நிரந்தர சேவைக்கு உள்ளீர்ப்பதற்கு 05 | பதவியணியினரில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு உரிய உள்ளீர்ப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| செயற்பாடுகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2006 செப்டம்பர் 22 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் புதிய சம்பள திட்டத்தின் படி சம்பள மறுசீரமைப்பிற்கு முன்னர் உரிய சகல பதவிகளுகம் அந்தந்த சேவைத் தொகுதிக்கும் மற்றும் சம்பள அளவிற்கும் உள்ளடங்குகின்ற வகையில் சீராக்கப்படுகின்ற முன்மொழிவுகள் தேசிய சம்பளம் மற்றும் ஆளணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்து சான்றிதழ் பெறப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக உள்ளீர்க்கப்பட்டதன் பின்னர் அதிகரிக்கக் கூடிய சம்பள அளவு தொடர்பாக அறியாமையால் உள்ளீர்த்தல் தற்காலிகமாக கைவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்கப்பட்ட உயர் சம்பள அளவுடனான பதவிகளில் வெற்றிடங்கள் காணப்படும் போது ஊழியர்களில் அநேகமானோர் கீழ் மட்ட சம்பள அளவில் வைக்கப்பட்டமையால் பதவி உயர்வுகளும் முகாமைத்துவத்தால் இழக்கச் செய்யப்பட்டிருந்தது. | வருடங்களுக்கு மேற்பட்ட ஒப்பந்த பதவியணியின் உத்தியோகத்தர்களிடம் இருந்து மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையினை கவனத்தில் கொண்டு பணிப்பாளர் சபை வழங்கிய தீர்மானத்தின் படி வரிசை அமைச்சு பிரதிநிதி ஒருவரை உள்ளடக்கிய பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 2 பேர்களைக் கொண்டுள்ள குழுவொன்று இந்த பதவி அணியினரின் உளக் குமுறல்கள் மற்றும் அவர்களின் பாதிப்புக்களை ஆய்வு செய்து பரிந்துரை அறிக்கையொன்று அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக் கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வரைவு ஆண்டறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும் 2021 ஆம் | இறுதி 02 வருடங்களில் காணப்பட்ட நாட்டின் நெருக்கடியான நிலைமை மற்றும் நடமாடும் வரையறைகளின் அடிப்படைகளில் வருடாந்த கணக்குகள் | நிதிக் கூற்றுக்கள் மற்றும் வரைவு ஆண்டறிக்கை குறித்துரைத்த திகதியின் போது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் |

| | | |
|---|---|---|
| ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 06 மாதங்கள் தாமதமாகி 2022 செப்டம்பர் 22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | தாமதமடைந்திருந்தது. 2022 ஆம் ஆண்டிற்குரிய ஆண்டறிக்கை உரிய கால எல்லையில் தாமதமின்றி சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |

## 4.2 பாதீட்டு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாதீடு செய்யப்பட்ட பெறுமதிக்கும் உள்ளபடியான செலவினங்களுக்கும் இடையே முரண்கள் 11 சதவீதம் முதல் 244 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. மேலும் 04 செலவின விடயங்களுக்காக மதிப்பீடுகள் தயாரிக்கப்படாமல் ரூபா 3,035,952 செலவினம் செய்யப்பட்டிருந்ததுடன், 02 செலவின விடயங்களுக்காக ரூபா 19,300,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், செலவினம் செய்யப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படல் வேண்டும். |